

இங்கிலாந்தில் முதல் முறையாக தி.மு.க. ஜென் Z (Gen Z) சந்திப்பை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான எம்.சி. பாலனின் பேரன் என். பி. வி. ரித்திக் ஒருங்கிணைத்தார். இதில் இளைஞர்கள் ஒன்றுகூடி தலைமைத்துவம், சமூகப் பங்களிப்பு மற்றும் எதிர்காலம் குறித்த தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தி.மு.க. மகளிர் அணியின் மாநிலச் செயலாளருமான ஹெலன் டேவிட்சனின் வழிகாட்டுதலோடு நடைபெற்றது.

கரூரில் 41 பேர் மரணத்திற்கு காரணம்

காவல்துறைதான் என அபாண்டத்தை அள்ளி வீசுவது முதல்வருக்கு அழகா?

சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை, ஜூலை 14 -

உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கண்காணிப்பில் சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் 41 பேர் இறந்த கரூர் சம்பவம் குறித்து பொதுவெளியில் பேசுவது இந்திய அரசியல் சட்டப்படி குற்றம் என்ற விவரம் தெரியாதவரா எங்கள் தமிழ்நாட்டின் முதல்வர்? இது பதவி பிரமாணத்திற்கு எதிரான குற்றம் என்று முதல்வருக்கு தெரியாதா? என முன்னாள் சட்டபேரவை தலைவர் மு. அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

41 பேர் கொலைக்கு காரணம் காவல்துறை தான் என்ற அபாண்டத்தை அள்ளி வீசுவது முதல்வருக்கு அழகா? இதனை இருமுறை டெல்லி சி.பி.ஐ. விசாரணைக்கு சென்ற போது மேற்படி குற்றச்சாட்டை தெரிவித்தீர்களா? தமிழக முதல்வர் அரசு தலைமை செயலாளர், முதல்வரின் தனிச்செயலாளர்கள் வழிகாட்டுதலோடு ஆட்சி நடத்துகிறாரா? அல்லது சினிமா தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் வழிகாட்டுதலோடு ஆணவ வசனம் பேசி வருகிறாரா?

சட்டமன்றத்தில் Party Fund என்று சொன்னதும் தி.மு.க.வினர் ஓடி விட்டார்கள் என்று வாய்மொழியாகவும், உடல் மொழியாகவும் நக்கலடிக்கும் CM சார் தேர்தலுக்கு முன் உங்கள் சட்டமன்ற வேட்பாளர்கள் ஒவ்வொருவரிடமும் ரூபாய் 2 கோடி முதல் ரூபாய் 10 கோடி வரை Party Fund பெற்றுக் கொண்டு தான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதாக உங்கள் ரசிகர்களும்,த.வெ.க. கட்சியினரும் புலம்புவது உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா? இது Party Fund இல்லையா? இதுதான் தூய ஆட்சி இலட்சணமா?

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் முஅப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட அலுவலகத்தில் மேயர் திருமதி ஆர். பிரியாவை, நேற்று (13.07.2026) சென்னையில் உள்ள தைபே பொருளாதார மற்றும் கலாச்சார மைய தலைமை இயக்குநர் ஸ்டீபன் எஸ். சி.ஹீசு (Mr.Stephen S.C. Hsu Director General Taipei Economic and Cultural Center in Chennai), துணை இயக்குநர் எரிக் சி.எல். சாவோ (Mr. Eric C. L. Chao Deputy Director Taipei Economic and Cultural Center in Chennai) ஆகியோர் சந்தித்து கல்வி, கலாச்சாரம் மற்றும் சுற்றுலா குறித்து கலந்துரையாடினர்.

டெல்லியிடம் உரிமைகளைப் பறிகொடுக்கும்

முதுகெலும்பற்ற முதல்வர்!

தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை, ஜூலை 14-

கடந்த தி.மு.கழக அரசு பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்தை முதலமைச்சரே மேற்கொள்ளும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்ததோடு, இது தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றத்திலும் நடத்தி வந்தது.

ஆனால், தற்போதைய த.வெ.க அரசோ மாநில உரிமைகளைச் சிதைக்கும் வகையில் ஆளுநருக்கும், ஒன்றிய அரசுக்கும் அடிபணிந்து துணைவேந்தர் தேடல் குழுவில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5 ஆக உயர்த்தவும், அதில் ஒன்றிய அரசின் UGC சார்பிலான உறுப்பினரையும் சேர்க்கத் துடிக்கிறது.

முதலமைச்சருக்கு இருக்கும் அதிகாரங்களையும் மாநில உரிமையையும் அடமானம் வைத்து, நம்முடைய பல்கலைக்கழகங்களின் அதிகாரத்தை ஒன்றிய அரசிடம் அடமானம் வைக்கும் முதுகெலும்பில்லாத கோழைதான் விஜய் என்பதை வரலாறு நினைவில்கொள்ளும்!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் கண்டித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில்

பட்டப்பகலில் பெண் கொடூரக் கொலை - 15 சவரன் நகை கொள்ளை!

த.வெ.க. அரசின் சட்டம் – ஒழுங்கு கேள்விக்குறி!

திருவள்ளூர், ஜூலை 14;-

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் பட்டப்பகலில் வீட்டிற்குள் புகுந்த மர்ம கும்பல், தனியாக இருந்த பெண்ணை கழுத்தில் கத்தியால் சரமாரியாக குத்திக் கொலை செய்து, சுமார் 15 சவரன் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் மாநிலம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பகல்நேரத்திலேயே வீட்டிற்குள் புகுந்து கொலை செய்து, எந்த அச்சமும் இன்றி கொள்ளையடித்து தப்பிச் சென்ற சம்பவம், மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு நிலை குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளதாக பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டியுள்ளன.

பழவேற்காடு பழைய பேருந்து நிலையம் அருகே வசித்து வந்த ராதாகிருஷ்ணன் - வனஜா (55) தம்பதியரின் பிள்ளைகள் திருமணமாகி தனித்தனியாக வசித்து வரும் நிலையில், முதிய தம்பதியர் மட்டும் வீட்டில் வசித்து வந்தனர். ராதாகிருஷ்ணன் மளிகைக் கடை நடத்தி வந்தார். வனஜா வீட்டிலேயே மாவு விற்பனை செய்து வந்ததாக கூறப்படுகிறது.

சம்பவத்தன்று நேற்று காலை வழக்கம்போல் கணவருக்கு தேநீர் கொடுத்து விட்டு வீட்டிற்கு வந்த வனஜா, பின்னர் தனியாக இருந்துள்ளார். மதியம் வீட்டிற்கு திரும்பிய ராதாகிருஷ்ணன், வீடு பூட்டப்பட்டிருந்ததைத் திறந்து உள்ளே சென்ற போது, கழுத்தில் பல இடங்களில் கத்திக்குத்துக் காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் உயிரிழந்த நிலையில் மனைவி கிடந்ததை கண்டு கதறி அழுதுள்ளார்.

தகவல் அறிந்து விரைந்து வந்த திருப்பாலைவனம் காவல்துறையினர் நடத்திய முதற்கட்ட விசாரணையில், மாவு வாங்குவது போல வீட்டிற்குள் நுழைந்த மர்ம கும்பல், வனஜாவை கொடூரமாக கத்தியால் தாக்கி கொலை செய்து, கழுத்தில் இருந்த தாலிச் சரடு, காதில் இருந்த தங்க நகைகள் உள்ளிட்ட சுமார் 15 சவரன் நகைகளை பறித்துக் கொண்டு, வீட்டை பூட்டி விட்டு தப்பிச் சென்றிருப்பது தெரியவந்துள்ளது.

கைரேகை நிபுணர்கள், மோப்ப நாய் பிரிவு, தனிப் படைகள் என பல்வேறு கோணங்களில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. முதிய தம்பதியர் மட்டும் வசித்து வந்ததை முன்கூட்டியே நோட்டமிட்டு, திட்டமிட்டு இந்தக் கொலை அரங்கேற்றப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

"த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு மாநிலம் முழுவதும் கொலை, கொள்ளை, வழிப்பறி, பெண்கள் மற்றும் முதியவர்களை குறிவைக்கும் குற்றங்கள் அதிகரித்து வருவதாக அன்றாடம் செய்திகள் வெளியாகின்றன. மக்கள் நிம்மதியாக வீட்டில் கூட இருக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது. பட்டப்பகலில் வீட்டிற்குள் புகுந்து பெண்ணை கொலை செய்து நகைகளை கொள்ளையடிக்கும் அளவுக்கு குற்றவாளிகள் அச்சமின்றி செயல்படுவது, சட்டம்-ஒழுங்கு அமைப்பு எந்த நிலையில் உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது" என்றுபொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

மேலும், "குற்றங்கள் நடந்த பிறகு விசாரணை நடத்துவதை விட, குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதே அரசின் கடமை. ஆனால் மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதில் அரசு தோல்வியடைந்துள்ளதாக பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. முதியவர்கள், பெண்கள் தனியாக வீட்டில் வசிக்கவே அச்சப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய சூழல்" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொடூரக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். மாநிலம் முழுவதும் சட்டம்-ஒழுங்கை வலுப்படுத்தி, பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளன.

பழவேற்காட்டில் பட்டப்பகலில் நடைபெற்ற இந்தக் கொலைச் சம்பவம், அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், பாதுகாப்பு குறித்த அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

திராவிட மாடல் நாயகர் அவர்களின் வழிகாட்டலில் மேயர் அறிவிப்பிற்கிணங்க பெருநகர சென்னை மாநாகராட்சி விருகம்பாக்கம் 128வது வார்டில் இயங்கிவரும் மகளிர் உடற்பயிற்சி கூடத்தில் தேர்தலுக்கு முன்பு ஆய்வு செய்த போது மகளிர் வைத்த கோரிக்கையை ஏற்று உடனடியாக புதிய உபகரணங்கள் வாங்க மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் அறிவுறுத்தினார். அதன் பேரில் ரூ.8 இலட்சத்தில் புதிதாக நடைபயிற்சி மேற்கொள்ள 2 (Treadmill), 1 மின் மிதிவண்டி, 6 (Yoga Mats), 2 (Thumble Rack) மற்றும் 1 உடற்பயிற்சி உபகரணம் உள்ளிட்டவை பொருத்தப்பட்டு மகளிர் உபயோகித்து மகிழ்ந்து மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் அனைவரும் நன்றி தெரிவித்தார்கள்.

சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர்

செ.மாதவன் பிறந்தநாள் விழா - கால்பந்தாட்ட இறுதிப் போட்டி!

சிங்கம்புணரி, ஜூலை 14-

சிங்கம்புணரியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் 93 வது பிறந்த நாளை முன்னிட்டு மாதவன் கால்பந்து கழகம் சார்பாக பாரிவள்ளல் பள்ளியில் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் 6ம் ஆண்டு மாநில அளவிலான கால் பந்தாட்டப் போட்டி 10 ம் தேதி தொடங்கியது.

விழாவிற்கு பள்ளித் தலைவர் வெற்றிச்செல்வி ராஜமாணிக்கம் தலைமை வகித்தார்.

பள்ளித் தாளாளர் அருளாளன், உமா அருளாளன் சாந்தி செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளி முதல்வர் சியாம் பிராங்க்ளின் டேவிட் வரவேற்றார். காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக டீன் மாணிக்கவாசகம் போட்டியை தொடங்கி வைத்தார்.

இறுதிப் போட்டி நேற்று முன்தினம் (12.07.2026 - ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்றது.

அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் சுப்பையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

முன்னாள் எம்.எல்.ஏ. அருணகிரி, பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சுழற் கோப்பைகள் வழங்கப்பட்டது.

இப்போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளை அணிகள் கலந்து கொண்டனர்.

இதில் தொழிலதிபர் ஆர்.எம்.எஸ்.சரவணன், ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், ஒன்றிய இளைரணி மனோகரன் பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம், தொழிலதிபர் கணேசன், ஆசிரியர் சுப்பிரமணியன், மேலாளர்கள் கிருஷ்ணன், சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பெற்றோர் ஆசிரியர் மாணவர் மாணவியர் தலைவர் டாக்டர் ராஜ்குமார் உடற்கல்வி ஆசிரியர்கள் மணிமேகலை சின்னையா, சரண்யா பள்ளி ஆசிரியக்கள் நிர்வாகத்தினர் மாணவர்கள் கலந்து செய்தனர்.

அண்ணன் பேரச்சொல்லு!



நரகம்

எதில்
இடமுண்டோ
தெரியாது

அண்ணன்
கூட்டத்துல
மிதிபட்டுச்
செத்தா

"யாரு லஞ்சம்
கேட்டாலும்

அண்ணன்
பேரச் சொல்லு..."

மொதல்ல
உங்க
நொண்ணனை

காருக்கு
உரிய வரிய
கட்டச் சொல்லு...

காட்டாம
மறச்ச
கருப்பு பணக்
கணக்குக்கு

மொதல்ல
"வெள்ளை
அறிக்கை
விடச் சொல்லு"...

அப்புறம்

கொல்லையும்
புல்லையும்
காட்டி
எதிர்லாயத்து
குதிரைகளை
களவாடும்
காரியத்தை
கைவிடச்சொல்லு...

ஆனா ஒண்ணு

சொர்க்கம்

குடும்பத்துக்கு
பணமுண்டு
கூடவே
அரசுப்பணி
உண்டு....

அப்புறம்
முக்கியமான
விசயம்...
"வாடா
போடான்னு"

"வாயில
நல்லா
வந்திரும்னு

இன்னும்
எவ்வளவு
தான்
தரம் தாழ்ந்து
பேசினாலும்

பைத்தியங்கள்
மீது
பகுத்தறிவுக்கு
கோபம்
வருவதில்லை..."

என்னநாஞ்
சொல்றது!

மருது அழகுராஜ்
கழகச் செய்தித்
தொடர்புக் குழு துணைத்
தலைவர்